**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2013–2014 ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக மூன்று பகல் நேர காப்பகங்கள் நடத்திட தொடராணை மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.11 நாள்: 06–03–2014

விஜய, மாசி 22,

திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.93, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 16–07–2012.
2. அரசாணை(நிலை) எண்.35, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28–03–2013.
3. முதன்மைச் செயலாளர் /மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், கடித எண்.3541/மா.தி.ந.2(1)/2013, நாள் 17.6.2013.

–––––––

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தேனி மாவட்டத்திலுள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக பகல் நேர காப்பகங்களை 2012–2013ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட, பின்வரும் மூன்று தொண்டு நிறுவனங்களுக்கு, நிறுவனங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 3.13 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.9,39,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது:–

| **வ.எண்.** | **தொண்டு நிறுவனத்தின் பெயர்** | **சிறப்பு காப்பு மையத்தின் இடம்** |
|---|---|---|
| 1. | அன்னை டோரா மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேர காப்பகம், ‘சேவா நிலையம் சொஸைட்டி’, ராஜதானி அஞ்சல், ஆண்டிப்பட்டி தாலுகா. | ஆண்டிப்பட்டி |
| 2. | சர்வோதீப்’ ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் தாலுகா | பெரியகுளம் |
| 3. | இமேஜ் பொது நல அறக்கட்டளை. உத்தமபாளையம் தாலுகா | உத்தமபாளையம் |

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக செயல்படும் மூன்று பகல் நேர காப்பங்களில் பணிபுரியும் 6 சிறப்பாசிரியர்களுக்கு ரூ.3,000/–லிருந்து ரூ.10,000/– ஊதிய மான்யம் உயர்த்தி வழங்கப்பட்டு டிசம்பர் 2012 முதல் மார்ச் 2013 வரை நான்கு மாதங்களுக்கு வித்தியாசத் தொகையாக ரூ.1,68,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. முதன்மைச் செயலாளர் /மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 2012–2013 ஆம் ஆண்டு தேனி மாவட்டத்திலுள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக மூன்று பகல் நேர காப்பகங்களை தொண்டு நிறுவனங்கள் மூலம் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.11,07,000/– நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு ரூ.10,50,500/–செலவினம் மேற்கொள்ளப்பட்டது என்றும், ரூ.56,500/– அரசு கணக்கில் திரும்பச் செலுத்தப்பட்டது என்றும், இந்த தொண்டு நிறுவனங்களுக்கு 2013–2014 ஆம் ஆண்டு நிதியுதவி வழங்க ஒரு தொண்டு நிறுவனத்திற்கு ரூ.4.81 இலட்சம் வீதம் மூன்று தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.14.43 இலட்சம் நிதி ஒப்பளிப்பு அளிக்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, தேனி மாவட்டத்தில் செயல்படும் (i) அன்னை டோரா மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேர காப்பகம், சேவா நிலையம் சொஸைட்டி, ராஜதானி அஞ்சல், ஆண்டிப்பட்டி தாலுகா, (ii) 'சர்வோதீப்' ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் தாலுகா மற்றும் (iii) இமேஜ் பொது நல அறக்கட்டளை, உத்தமபாளையம் தாலுகா ஆகிய மூன்று மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான பகல் நேர காப்பகங்களை, 2013–2014 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்திட, இரண்டு காப்பகத்திற்கு ரூ.7,76,000/–மும் அன்னை டோராரா மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேர காப்பகத்திற்கு ரூ.2,68,000/–மும் ஆக மொத்தம் மூன்று காப்பகங்களுக்கு ரூ.10,44,000/–(ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:–

**சர்வோதீப்' ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் தாலுகா மற்றும் இமேஜ் பொது நல அறக்கட்டளை, உத்தமபாளையம் தாலுகா**

| வ.எண். | விவரம் | | தொகை ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| அ. | பணியாளர் | | | |
| | 1. | சிறப்பு கல்வி பயிற்றுநர்/ Occupational Therapist/Physio Therapist ரூ.10,000/– x 2 x 12 மாதங்கள் | 2,40,000/– | |
| | 2. | Care giver / Nursing trained/ ஆயா ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | 12,000/– | 2,64,000/– |
| | 3. | துப்புரவுப் பணியாளர் ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | 12,000/– | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆ. | இதர செலவினங்கள் | | | 1,24,000/– |
| | 1. | உணவு ரூ.10/– x 25 நாட்கள் x 12 மாதங்கள் x 30 குழந்தைகள் | 90,000/– | |
| | 2. | மருந்துகள் | 3,000/– | |
| | 3. | எழுதுப் பொருட்கள் | 3,000/– | |
| | 4. | வாடகை | 24,000/– | |
| | 5. | நிர்வாகச் செலவு | 4,000/– | |
| **மொத்தம் (ஒரு காப்பகத்திற்கு)** | | | | **3,88,000/–** |

ரூ.3,88,000/– x 2 மையங்கள் = ரூ.7,76,000/–
(ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்)

**அன்னை டோரா மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேரக் காப்பகம்.**

| **வ.எண்.** | **விவரம்** | | **தொகை ரூ.** | **மொத்தம் ரூ.** |
|---|---|---|---|---|
| **அ.** | **பணியாளர்** | | | |
| | 1. | சிறப்பு கல்வி பயிற்றுநர்/ Occupational Therapist/Physio Therapist ரூ.10,000/– x 1 x 12 மாதங்கள் | 1,20,000/– | 1,44,000/– |
| | 2. | Care giver / Nursing trained/ ஆயா ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | 12,000/– | |
| | 3. | துப்புரவுப் பணியாளர் ரூ.1,000/– x 1 x 12 மாதங்கள் | 12,000/– | |
| **ஆ.** | **இதர செலவினங்கள்** | | | 1,24,000/– |
| | 1. | உணவு ரூ.10/– x 25 நாட்கள் x 12 மாதங்கள் x 30 குழந்தைகள் | 90,000/– | |
| | 2. | மருந்துகள் | 3,000/– | |
| | 3. | எழுதுப் பொருட்கள் | 3,000/– | |
| | 4. | வாடகை | 24,000/– | |
| | 5. | நிர்வாகச் செலவு | 4,000/– | |
| **மொத்தம் (ஒரு காப்பகத்திற்கு)** | | | | **2,68,000/–** |

(ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் மட்டும்)

| | | |
|---|---|---|
| 1. | சர்வோதீப்’ ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி, பெரியகுளம் தாலுகா மற்றும் இமேஜ் பொது நல அறக்கட்டளை, உத்தமபாளையம் தாலுகா (இரண்டு காப்பகத்திற்கு) | ரூ.7,76,000/– |
| 2. | அன்னை டோரா மனவளர்ச்சி குன்றியோருக்கான பகல் நேரக் காப்பகம், ஆண்டிப்பட்டி தாலுக்கா. | ரூ.2,68,000/– |
| | **மொத்தம்** | **ரூ.10,44,000/–** |

(ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்)

**5.** முன்பக்கம் பத்தி–**4**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:-

"**2235** – சமூகப் பாதுகாப்பும் நலனும் –**02.** சமூக நலன் –**101**– மாற்றுத் திறனாளிளிகள் நலன் – II. மாநிலத் திட்டம் – LX தேனி மாவட்டத்தில் அரசு சாரா அமைப்புகள் மூலம் மனநலம் குன்றிய குழந்தைகளுக்காக **2** பகல் நேர பராமரிப்பு மையங்களைத் தொடங்குவதற்கு நிதியுதவி – **09** உதவித் தொகை –**03** குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை (து.தொ.கு.**2235–02–101**–LX-0939)"

**6**. மேலே பத்தி **4**–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார். மேலும் இச்செலவினம் மேற்கொண்டதற்கான பயனீட்டுச் சான்றினை பெற்று அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.**7722**/நிதி(சந)/**2014**, நாள் **03.03.14**–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**78.**
மாநில கணக்காயர், சென்னை–**18.**
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–**35.**

**<u>நகல்:</u>**
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம்.
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், தேனி மாவட்டம்.
நிதி (சந)த் துறை, சென்னை–**9.**
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.